**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081638

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 04/2023 | Date: நாள் 09.05.23

2. (i) Act சட்டம்: PC Act 1988 | Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: as amended by
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: the Prevention of Corruption (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 02.05.2023 காலை சுமார் 11.00 மணி)
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.05.23 | Time நேரம் : காலை 07.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.05.23 | Time நேரம் : காலை 07.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து பூர்வமான புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கிமீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மின்செயற்பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மின்சார வாரியம் TANGEDCO, உசிலம்பட்டி கோட்டம் மதுரை மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.சுப்புராஜ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வாலகுரு
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1959 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 3/182, மாருதி நகர், அனுமன் கோவில் அருகில், சிவரக்கோட்டை, கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. அழகு மணிமாறன், மின்செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம் TANGEDCO, உசிலம்பட்டி கோட்டம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. Subbaraj 9-5-23 | [signature] 09/05/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.05.23 at 0825 hrs.

Name: பெயர் A. AMBROSE JAYARAJA
Rank: நிலை Inspector of Police, VS AC, Madurai

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 09.05.2023-ஆம் தேதி 07.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்து போது, மதுரை மாவட்டம். கள்ளிக்குடி தாலுகா சிவரக்கோட்டை, அனுமன் கோவில் அருகிலுள்ள மாருதி நகர் கதவு எண். 3/182 என்ற முகவரியில் வசிக்கும் வாலகுரு மகன் திரு. V. சுப்புராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி எடுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் வா. சுப்புராஜ், S/o. வாலகுரு, 3/182 மாருதி நகர், அனுமன் கோவில் அருகில், சிவரக்கோட்டை, கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுனர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் கள்ளிக்குடி தாலுகா சிவரக்கோட்டை கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். மதுரையில் உள்ள குடிநீர் வடிகால் வாரியத்தில் ஓட்டுநராகப் பணியாற்றி, கடந்த 2005-ம் ஆண்டு சுய விருப்பத்தின் பேரில் பணி ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2020-ம் ஆண்டு பேரையூர் தாலுகா விட்டல்பட்டி கிராமத்தில்_சர்வே எண் 258/2, 263/1, 263/3-ல் உள்ள சுமார் 3 ¾ ஏக்கர் விவசாய புஞ்சை நிலத்தை விலைக்கு வாங்கினேன். அந்த இடத்தில் ஏற்கனவே திரு.கந்தசாமி என்பவர் கிரஷர் வைத்திருந்தார். அந்த இடத்தில் திரு.கந்தசாமி பெயரில் வணிக மின் இணைப்பு உள்ளது. ஆனால் கிரஷர் செய்யல்படவில்லை. நான் அந்த இடத்தில் சர்வே எண் 263/3-ல் கீழ்புறம் 25 சென்ட் இடத்தில் தகரத்தில் ஒரு ஷெட் கட்டி அதனை தென்காசி மாவட்டம் சுரண்டையைச் சேர்ந்த திரு.முருகேசன் என்பவருக்கு 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மாத வாடகைக்கு கொடுத்துள்ளேன். அந்த ஷெட்டில் கன்னன் டெய்ரி என்ற பெயரில் திரு.முருகேசன் பால் குளிரூட்டும் நிலையம் வைத்து தொழில் செய்து வருகிறார். ஆனால், அந்த இடத்தில் தொழில் நடத்துவதற்கு தேவையான தொழிற்சாலை மின் இணைப்பு இல்லாத காரணத்தால் திரு.முருகேசன் இதுநாள் வரை ஜெனரேட்டர் பயன்படுத்தி தொழில் செய்து வருகிறார். தொடர்ந்து, அவர் என்னிடம் கேட்டுக் கொண்டதன் பெயரில், நான் எங்கள் இடத்தில் புதியதாக 32 KW கிலோ வாட் சக்தி உள்ள தொழிற்சாலை மும்முனை மின் இணைப்பு கேட்டு T. ராமநாதபுரத்திலுள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு கடந்த 29.03.2023-ம் தேதியன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். எனது விண்ணப்ப எண் 20005 18903 23103 ஆகும். அதன் பேரில் எனது இடத்தை T.ராமநாதபுரம் உதவி மின் பொறியாளர் நேரில் வந்து பார்வையிட்ட

பின்னர் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்து மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசு கட்டனம் ரூ.96536/- செலுத்த வேண்டும் என்று சொன்னதன் பேரில் அன்றைய தினமே நான் பணத்தை எனது மருமகன் சுந்தர் மூலம் ஆன்லைன் வழியாக செலுத்தினேன். இது குறித்து எனது செல்போனுக்கு இரண்டு குறுஞ்செய்திகள் வந்தன. பின்னர், எழுமலை உதவி செயற் பொறியாளர் அவர்கள் கடந்த 17.4.2023-ம் தேதியன்றும், உசிலம்பட்டி செயற் பொறியாளர் கடந்த 25.4.2023-ம் தேதியன்றும் நேரில் வந்து எனது இடத்தை பார்வையிட்டார்கள். அதன் பின்னர் நான் T.ராமநாதபுரம் மின் வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து உதவி மின் பொறியாளர் அவர்களிடம் கேட்ட போது, புதிய மின் இணைப்புக்கு டிரான்ஸ்பார்மர் வைப்பதற்கு அவரும், உதவி செயற் பொறியாளரும் பரிந்துரை செய்து உசிலம்பட்டியில் உள்ள செயற் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் கேட்டு கோப்பை அனுப்பி வைத்திருப்பதாகவும், அவரிடம் நேரில் சென்று விவரம் கேட்டுக் கொள்ளுமாறும் உதவி மின் பொறியாளர் என்னிடம் கூறினார். எனவே, கடந்த 2.5.23-ம் தேதியன்று நான் உசிலம்பட்டியிலுள்ள மின் செயற் பொறியாளர் அலுவலகத்துக்கு நேரில் சென்று செயற் பொறியாளர் திரு.அழகுமனிமாறன் அவர்களை காலை சுமார் 11 மணி அளவில் நேரில் சந்தித்து எனது விண்ணப்பம் குறித்து கேட்டேன். அப்போது அவர் என்னிடம் உங்களுக்கு புதிய டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு நான் பரிந்துரை செய்தால்தான் கண்காணிப்பு பொறியாளர் ஒப்புதல் அளிப்பார். அதற்காக எனக்கு ரூ.20,000/- தனியாக தர வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் ஏற்கனவே அரசுக்கு ஆன்லைன் மூலம் ரூ.96536/- கட்டனம் செலுத்திய விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் அது வேறு இது வேறு உங்களைப் போல தொழில் செய்பவர்களிடம் பணத்துக்கு என்ன பிரச்சினை எனவே, நான் கேட்ட பணத்தைக் கொடுத்தால் தான் உங்கள் இடத்தில் டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு நான் பரிந்துரை செய்வேன். அதன் பின்னர்தான் நீங்கள் கேட்டுள்ள மும்முனை தொழிற்சாலை மின் இணைப்பு கொடுக்க முடியும், எனவே ரூ.20,000/- கொடுத்து உங்கள் வேலையை முடித்துக் கொள்ளுங்கள் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் சரி பார்க்கலாம் என்று சொல்லி வீட்டிற்கு வந்து விட்டேன். ஆனால், அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. கடந்த வாரம் முழுவதும் எனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தங்கள் அலுவலகத்திற்கு என்னால் வர இயலவில்லை. எனவே, எனது இடத்திற்கு மும்முனை தொழிற்சாலை மின் இணைப்பு வழங்குவதற்கு தேவையான டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு பரிந்துரை செய்ய என்னிடம்

ரூ.20,000/- லஞ்சம் கேட்கும் உசிலம்பட்டி மின் செயற் பொறியாளர் திரு.அழகுமணிமாறன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து கம்ப்யூட்டரில் எடுத்த பிரிண்ட் அவுட், 10.4.2023-ம் தேதியன்று எனது செல்போனுக்கு வந்த இரண்டு குறுஞ்செய்திகளின் பிரிண்ட் அவுட், அன்றைய தினம் ரூபாய் 96536/- பணம் கட்டியதற்கான ரசீது எண் PGCCAN 51722 0926-ன் நகல், எனது பெயரில் சர்வே எண் 263/3-க்கு உள்ள பட்டா எண் 1398-ன் நகல், எனது இடத்தின் FMB வரைபடம், எனது ஆதார் அட்டை 5224 3629 4430-ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், செயற் பொறியாளர் திரு.அழகு மணிமாறன் அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.20,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒம்) **XXXXXX** (V. சுப்புராஜ்), 9.5.23.

**Sir, Received the written complaint on today 09.05.2023 at 07.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Director of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 4/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.30 hrs and took up investigation. Sd./- XXXXXX (A.Ambrose Jayaraja) 09.05.2023, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original written complaint of Tr.V.Subburaj, S/o. Valaguru, Door No. 3/182, Maruthi Nagar, Near Anuman Temple, Sivarakottai, Kallikudi Taluk, Madurai District along with Xerox copies of 1) Application Status Report through online, 2) Printout copy of SMS received from TANGEDGO in his mobile Number, 3) Payment receipt No.**

**PGCCAN 51722 0926 for the amount of Rs.96,536/-, 4) Patta No. 1398 for Survey No. 263/3 and FMB and 5) Aadhar card of Complaint Tr.V.Subburaj are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

09/05/2021

**(A. Ambrose Jayaraja)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**